**பண்டாரவளை மாநகர சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

பண்டாரவளை மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது இந்த அறிக்கையின் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுப்பிற்குள்ளாக்கப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க பண்டாரவளை மாநகர சபையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது பிரதேச அபிவிருத்தி உதவி செயற்றிட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற ரூபா 16,000,000 நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்றில் மூலதன உதவியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பிரதேச அபிவிருத்தி உதவி செயற்றிட்டங்களில் கிடைக்கின்ற பணத்தை மூலதன நிதி உதவியாக கணக்கீடு செய்யப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் சிட்டையிடல்களுக்கு உரித்தல்லாத இருப்புக்கள் மரக்கறி கடைகளில் ஒரே தடவையில் அறவிடல் ரூபா 198,077,523 தொகை அதிகரித்து நிதிச் செயற்பாடுகள் கூற்றிற்கு கொண்வரப்பட்டிருந்தது. | ரூபா 198,077,523 தொகை நிதிக் கூற்றுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும் இந்த தொகை நிலுவை வருமான பட்டோலையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | மாநர சபை கணக்குகளின் மாதிரியின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக கணக்கீடு செய்ய முடியாதிருந்த போதிலும் ரூபா 3,606,600,414 ஆன காணி மற்றும் கட்டிடங்கள், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக கணக்கீடு செய்யபட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் தற்காலிக எரிபொருள் களஞ்சியத்தில் ரூபா 137,430 ஆன எரிபொருள் இருப்பு நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (உ) | உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தின் மீதி உறுதிப்படுத்தல்களில் சான்றுகள் சமர்ப்பிக்கப்பிக்கப்பட்ட ரூபா 4,403,970 ஆன கடன் தொகை மற்றும் அதற்குரிய வட்டி ரூபா 3,618,597 நிதிக் கூற்றறுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | முன்னைய ஆண்டின் மீதிகளை சரிசெய்தல்களாகக் காண்பித்து 02 சொத்துக் கணக்குகள் மற்றும் பொறுப்புக் கணக்கிற்குரிய கூட்டுப்பெறுமதி ரூபா 22,632,989 திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | கடந்த ஆண்டிற்குரிய கடன்கொடுத்தோர் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டமையின் தவறை சரிசெய்வதற்காக ரூபா 1,808,345 திரண்ட நிதியக் கணக்கில் வரவு வைத்ததிருந்த போதிலும் பேரேட்டில் கடன்கொடுத்தோர் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது பொருள் மெய்மையாய்வு சபையின் பரிந்துரையின் படி அகற்றப்பட்டிருந்த கணனி இயந்திரம், ஜீ ஐ குழாய், திரைச்சீலை மற்றும் டெக்டர் வண்டி போன்ற சொத்துக்களுக்குரிய ரூபா 627,560 தொகை மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | இயந்திர உபரணங்கள் ரூபா 298,666 தொகை, மோட்டார் வாகனமும் வண்டியும் ரூபா 182,244 தொகை, தளபாட உபகரணங்கள் ரூபா 146,650 ஆக சரியான மீதி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஐ) | முன்னைய ஆண்டின் போது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு உள்ளீர்க்கப்பட்டிருந்த 06 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 703,896 ஊழியர் கடன் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போது அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 703,896 ஆகும். அது 2023 ஆம் ஆண்டில் சரியாகக் கணக்கீடு செய்யப்படும். | - மேற்படி - |
| (ஒ) | மீளாய்வாண்டின் போது ஒப்பந்த பிணை வைப்புப் பெறுமதி பட்டோலையின் பிரகாரம் ரூபா 5,620,431 ஆக இருந்த போதிலும் நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 56,204,301 ஆக ரூபா 50,583,870 அதிகரித்து பதியப்பட்டு கணக்குகள் சமப்படுத்தப்பட்டுள்ளது. | பொது வைப்புப் பேரேட்டைப் பரீட்சித்து பட்டோலைகள் சரிசெய்யப்படும். | - மேற்படி - |
| (ஓ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு பேரூந்து தரிப்பிட நிலையத்தில் 02 கடைகளில் இருந்து கிடைத்த வருமானம் ரூபா 12,177,475 தொகை நிதி நிலைமைக் கூற்றில் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | மீளாய்வாண்டில் நீதிமன்ற தண்டப் பணம் 207,788 மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 5,060,749 ஆகும். கூட்டுமொத்தமாக ரூபா 5,268,537 குறைத்து நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் அட்டுறு அடிப்படையில் கணப்பிட்டு கணக்கீடு செய்யப்படும். | - மேற்படி - |
| (க) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு வீதிகள், வடிகாண் முறைமை, பக்கச்சுவர் மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்களை திருத்தும் 23 வேலைகளுக்குரிய பட்டியல்கள் சமர்ப்பிக்காத கூட்டுமொத்தமாக ரூபா 36,407,093 தொகைக்காக கடன்கொடுத்தோர் ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சிட்டையிட்ட பட்டியல்களின் பெறுமதி மாத்திரம் கடன் கொடுத்தோராக கணக்கீடு செய்யப்படும். | - மேற்படி - |
| (கா) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு வேலைக் கடன்கொடுத்தோர் கணக்கீடு செய்யும் போது ஏற்பட்டிருந்த இரட்டைக் கணிப்பீட்டு வழுவின் காரணமாக நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 936,000 நடைமுறை பொறுப்பு அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | - மேற்படி - |
| (கி) | மீளாய்வாண்டின் போது பிரதேச அபிவிருத்தி உதவி செயற்றிட்டத்தின் கீழ் மற்றும் சந்தையின் நிதியத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 10,634,172 கூட்டுத் தொகைமயான 144 சொத்து அலகுகள் நடைமுறை அல்லா சொத்தாக முதலனமாக்கப் பட்டிருக்கவில்லை. | தற்போது பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டின் போது கணக்குகளின் மூலம் சரிசெய்யப்படும். | - மேற்படி - |
| (கீ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்பிற்காக கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 969,863 தொகை நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | - மேற்படி - |
| (கு) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்கு சமமானவைகளாக நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 6,754,888 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (கூ) | மீளாய்வாண்டின் போது ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்ட ரூபா 2,869,416 வேலை முற்பணம் வைப்பாக பதியப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (கெ) | மீளாய்வாண்டின் போது மாற்றப்பட்டிருந்த ரூபா 5,000,000 ஆன நிலையான வைப்பு மற்றும் சபையின் வங்கிக் கணக்கிற்கு | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | இடையே ரூபா 4,000,000 நிதி மாற்றங்களின் போது சரியாக வைப்புத் தலைப்பின் கீழ் பதியப்பட்டிருந்ததன் காரணமாக மீளச் செலுத்த வேண்டிய வைப்பு மீதி ரூபா 9,000,000 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (கே) | மீளாய்வாண்டின் போது தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிலிருந்து அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது 05 வீதிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை திருத்துவதற்காக சபைக்குச் செலுத்தப்பட்ட ரூபா 7,924,153 தொகை பொது வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் தற்போது உரிய இழப்புக்களை நிவர்த்தி செய்வதற்காக நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டுள்ள தொகை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமான விடயங்கள் 06 இற்குரிய நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகைக்கும் பட்டோலைகளின் பிரகாரமான மீதிகளின் கூட்டுத்தொகைக்கும் இடையே ரூபா 2,198,970 வேறுபாடு காணப்பட்டது. | பரீட்சித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது பொதுப் பேரேட்டில் 07 பேரேட்டு கணக்குகளின் ஆரம்ப மீதியினை குறிப்பிடும் போது கூட்டுமொத்தமாக ரூபா 148,921,998 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | பொதுப் பேரேட்டின் ஆரம்ப மீதியில் சீராக்கப்பாதிருந்த போதும் உப கணக்குகள் ஊடாக இறுதிக் கணக்கிற்கு மீதி சரியாக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | பொதுப் பேரேடு தயாரித்து சரியான மீதியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது மாநகர சபையின் நிதிக் கூற்றைத் தயாரிப்பதற்கு பொதுப் பேரேடு | 2023 ஆம் ஆண்டில் சரியான பொதுப் பேரேடு பேணிச் செல்லப்படும். | பொதுப் பேரேடு முறையாக பேணிச் செல்லப்பட வேண்டி |

| | | | |
|---|---|---|---|
| | முறையாகப் பேணிச் செல்லாமையின் காரணமாக திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றில் காண்பிக்கப்படுகின்ற பெறுமதிகள் தொடர்பாக மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் சமப்படுத்துதல் தொடர்பாக கணக்காய்வின் திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | | இருந்ததுடன் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் மற்றும் இறுதியில் ஏனைய நிலுவை வருமானம், முற்பணமாகக் கிடைத்த வருமானம் மற்றும் நானாவிதக் கடன் கொடுத்தோர் பெறுமதிகள் பேரேட்டில் நானாவித வருமானம் மற்றும் நானாவிதச் செலவின கணக்குகளில் குறிப்பிடல் முறையானதாக மேற்கொள்ளப்படாமையின் காரணமாக பெறுமதி ரூபா 716,006,962 ஆன பேரேட்டின் கொடுக்கல் வாங்கல்களின் பதிவுகளை திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 104(4) ஆம் பிரிவு | 2015 ஏப்ரல் 09 ஆம் திகதி இடம்பெற்ற சபைக்குரிய கெப் வண்டியின் விபத்து தொடர்பாக முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | பதில் பின்னர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | ஊவா மாகாண பிரதம செயலாளரின் 2005 மார்ச் 24 ஆந் திகதிய 2/மூ/1 ஆம் இலக்க கடிதம் | ஊழியர் பிணைவைக்க வேண்டிய 28 உத்தியோகத்தர்கள் பிணைவைப்பு செய்திருக்கவில்லை. | இந்த 28 பேர்களில் 15 பேர்கள் பிணை வைத்திருந்ததுடன் ஏனைய 13 பேர்களிடமிருந்து பிணைவைப்பைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,808,000 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 39,020,666 ஆகும்.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

நிதி ரீதியான கொடுக்கல் வாங்கல் தொடர்பாக தெளிவாகவும் சரியாகவும் புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணிச் செல்ல வேண்டியது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அடிப்படைப் பொறுப்பாக இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குரிய மாநகர சபையின் நிதிக் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு பொதுப் பேரேட்டில் காசுக் கணக்கின் மீதி ரூபா 118,890,715 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 7,011,135 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 111,879,580 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது அரச வங்கி ஒன்றில் சேமிப்பு கணக்கில் ரூபா 6,754,888 மீதி யொன்று நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் சேமிப்புக் கணக்கின் பாஸ் புத்தக மீதி ரூபா 306,555 ஆக இருந்தது. | நாளாந்த காசுப் பொலிப்பு புத்தகத்தின் மீதி மற்றும் வங்கி இணக்கக்கூற்றின் மீதி சரியாக இருந்ததுடன் திசம்பர் 31 இல் உள்ளவாறு ஈடுபடுத்தப்பட்ட இறுதி மீதி ரூபா 701,135 சரியான மீதியாகும் என அறியத்தருகின்றோம். மேலும் 2023 ஆம் ஆண்டின் கணக்குகளில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் கீழ் சரியான மீதியை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகராதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | **2022** | | | | **2021** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **(i)** | ஆதன வரியும் வரியும் | 18,885,000 | 18,284,746 | 14,907,314 | 3,377,432 | 35,276,000 | 35,276,000 | 16,404,587 | 18,871,413 |
| **(ii)** | வாடகை | 44,919,768 | 46,427,854 | 43,939,750 | 2,488,104 | 11,795,000 | 11,795,000 | 57,599,065 | (45,804,065) |
| **(iii)** | அனுமதிப்பத் திரக் கட்டணம் | 6,605,000 | 6,805,573 | 6,805,573 | 0 | 21,959,000 | 21,959,000 | 8,622,584 | 13,336,416 |
| **(iv)** | ஏனைய வருமானம் | 52,012,000 | 60,861,677 | 48,189,543 | 12,672,134 | 233,349,691 | 233,349,691 | 45,095,787 | 188,253,904 |
| | மொத்தம் | 122,421,768 | 132,379,850 | 113,842,180 | 18,537,670 | 302,379,691 | 302,379,691 | 127,722,023 | 174,657,668 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவை ஆதனவரி ரூபா 11,352,835 தொகை, கடை வாடகை ரூபா 1,640,816 தொகை, விருந்தினர் விடுதி முகாமைத்துவக் கட்டணம் ரூபா 13,294,588 தொகை, சந்தை வாடகை ரூபா 1,565,697 தொகை, கேள்விக் கடை வாடகை ரூபா 3,885,207 தொகை, பொது மலசல கூட கட்டணம் ரூபா 771,862 மற்றும் ஏனைய வருமானம் ரூபா 80,374 என்பன மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானங்களை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானங்களை விரைவாக அறவிடல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபை கலமடுகஸ்தென்ன, பண்டாரவளை என்ற இடங்களில் நடாத்திச் செல்கின்ற கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலத்தில் நீண்ட காலமாக உக்காத கழிவுகள் குவித்து வைக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தின் நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு கடைக்காக ஒரே தடவையில் அறவிடல் பெறுவனவாக ரூபா 77,065,544 தொகை சபை நிதியத்திற்கு கிடைத்திருந்தது. இந்தப் பெறுவனவுகளில் ரூபா 71,822,477 தொகை யோஜித்த விசாக்கா வீதியில் மொத்த விற்பனை மரக்கறி சந்தை தொகுதியின் கடைகளுக்காக இருந்ததுடன் 2018 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து அந்த சந்தை நிலையத்தின் கடைகளுக்காக ஒரே தடவையில் பணம் அறவிடல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையும் சந்தைத் தொகுதியின் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் ஒரே தடவையில் கிடைக்கப்பெற்ற பணம் சபைக்கு பொறுப்பாக வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்படாதிருந்ததுடன் மாநகர சபையினால் வெளித் தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட பணம் நோக்கம் இலக்கிடப்பட்ட பணிகளுக்குப் புறப்பான பணிகளுக்காக செலவிடப் பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | இலக்கிடப்பட்ட பணிகளில் மாத்திரம் நிதியினை ஈடுபடுத்துதல் வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சபைக்குரிய கெப் வண்டி 2015 ஏப்ரல் 09 ஆந் திகதி விபத்திற்குட்பட்டிருந்ததுடன் ஏற்பட்ட நட்டத்திற்காக இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் கெப் வண்டியை பழுதுபார்த்து மீண்டும் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை காப்புறுதி கூட்டுத் தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பழுதுபார்த்தல் நிறுவனத்திற்கு எடுத்துச் சென்று பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் கெப் வண்டியின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக தனியார் நிறுவனம் ஒன்றில் தரித்துவைக்கப்பட்டிருந்த காலத்தில் 27 வகைகளுக்குரிய உதிரிப் பாகங்கள் மற்றும் துணைப் பாகங்கள் தொலைந்து போய் இருந்தமை 2022 ஒக்டோபர் 31 ஆந் திகதி மாநகர சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்கண்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனத்தை பழுதுபார்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | பழுதுபார்த்தலை விரைவாக பூர்த்தி செய்து உதிரிப் பாகங்கள் தொலைந்தமை தொடர்பாக பரிசோதனைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது மாநகர சபையினால் இனங்காணப்பட்டிருந்த அனுமதியற்ற 37 நிர்மாணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்பார்வை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற தொழில்நுட்ப உத்தியோகத்தரால் அந்த இடங்களிலேயே தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு நடவடிக்கை எடுக்காத நபர்களுக்கு எதிர்காலத்தில் வழக்குத் தொடரப்படும். | விரைவாக நடவடிக்கை எடுத்து தீர்த்துவைத்தல் வேண்டும். |

### 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பண்டரவளை மாநகர சபைக்குரிய மொத்த மற்றும் சில்லறை சந்தையில் 2020 ஆம் ஆண்டின் கட்டணத்தை அறவிடும் உரித்தை வாடகைக்கு வழங்குவதற்காக | பெறுகைகளை மேற்கொண்டு வாடகைக்கு வழங்கப்படும். | முறையான பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றி ஆதனங்கள் வாடவைக்கு வழங்கப்படல் வேண்டும். |

கேள்விதாரர்களைக் கோரும் போது 2019 ஆம் ஆண்டின் இறுதி 10 நாட்கள் வரை தாமதித்து செய்திப்பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதன்படி பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்படுகின்ற ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் கேள்வி கோரும் திகதி 06 நாட்களுக்கு வரையறுக்கப்பட்டிருந்தது.
அதனால் 03 நாட்களுக்குப் பின்னர் கேள்வி விண்ணப்பங்கள் விநியோகித்தமையின் காரணமாக கேள்விதாரர்கள் பூர்த்தி செய்ய வேண்டியதாகக் குறிப்பிடப்பட்ட விஷேட நிபந்தனைகளை பூர்த்தி செய்வதற்கு போதியளவான காலம் காணப்பாதிருந்ததுடன் அதற்காக நியாயமான காலத்தை வழங்குமாறு கோரிக்கைவிடப்பட்ட போதிலும் அதற்குப் பெறுகைகள் குழு கவனம் செலுத்திருக்கவில்லை. அதன்படி கேள்விதாரர்களுக்கு அவர்களின் சொத்துக்கள் மற்றும் உரித்துக்களின் உறுதிச் சான்றிதழ்களை சமர்ப்பிப்பதற்கு முடியாமை போன்ற மிகவும் சிறிய குறைபாடுகளின் அடிப்படையில் உயர்ந்த கேள்வி சமர்ப்பித்த கேள்விதாரர்களின் கேள்வியை நிராகரித்தல் மற்றும் குறைந்த கேள்வி சமர்ப்பித்த கேள்விதாரர்களின் கேள்வி ஏற்றுக்கொள்ளல் என்பவற்றால் மாநகர சபைக்கு ரூபா 8,290,000 நிதிரீதியான நட்டம் ஏற்பட்டிருந்தது.